# मातृ षोडशि
# மாத்ரு ஷோடஸி

ஒரு தாய் சூலுற்ற கணத்திலிருந்து அவள் பெற்றெடுத்த மகவிற்காக  சொல்லில் அளவிட முடியாத துயரங்களையும் கஷ்டங்களையும் அந்த குழந்தையின் நலத்தை கருத்தில் கொண்டு மகிழ்ச்சியுடனும் பொறுமையுடனும் ஏற்றுக் கொள்கிறாள். இதற்குக் கைம்மாறாக அந்த மகன் எந்த விதத்திலும் எதையும் கொடுக்க ஈடாகாது. ஆனால் அந்த அன்னை இயற்கை எய்திய பின் அவளுக்கு நேர்த்திக் கடன்செய்யும் போது கொடுக்கும் பிண்டப்ரதானம் சமர்ப்பிக்கும் சமயம் சொல்லப்படும் வடமொழி ஸ்லோகங்களின் சேகரிப்பு ‘மாத்ரு ஷோடஸி’.

गर्भेषु विषमे दुःखं विषमे भूमि वर्त्मनि |
तस्य निश्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
கர்பேஷு விஷமே து:கம் விஷமே பூமி வர்த்மனி|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம்
ததாம்யஹம்||
கர்ப காலத்தில் கருப்பையில் தங்கியிருக்கும் பொழுதும் பூமியில் விழ ஏதுவாயிருக்கும் பாதையில் செயல்படும்பொழுதும் கொடுத்த துன்பங்களுக்காக இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

मासे मासे कृतं कष्टं वेदना प्रवेषु च |
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
மாஸே மாஸே க்ருதம்கஷ்டம் வேதனாப்ரஸவேஷு ச |
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம்
ததாம்யஹம்||
கர்ப காலத்தில் மாதாமாதம் கர்ப வளர்ச்சியின்பொழுது பிரசவ காலத்தில் தாயை எந்தெந்த வேதனை,இன்னல்களுக்கு உட்படுத்தினேனோ அவைகளுக்கு இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

यावत्पुत्रो न भवति तावत् मातुष्च चिन्तनम् |
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
யாவத் புத்ரோ ந பவதி தாவத் மாதுஸ்ச சிந்தனம்|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம்
ததாம்யஹம்||
குழந்தை பிறக்கும் வரை தாய் எவ்வளவு கவலைகளுடன் மகவையே நினைத்து நினைத்து உருகினாளோ இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

शैथिल्ये प्रसवे प्राप्ते माता निन्दति दुष्कृतम्|
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
ஸைதில்யே ப்ரஸவே ப்ராப்தே மாதா நிந்ததி
துஷ்க்ருதம்|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம்
ததாம்யஹம்||
கர்ப்பத்திலுள்ள மகவுக்கு கர்ப நழுவல் முதலிய எதிர்பாராத விபரீதங்கள் தலை காட்டும்பொழுது, தான் செய்த பாபத்தின் விளைவுதானோ என்று துன்புறுவாளே, இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

संपूर्णे दशमे मासि माता अत्यन्त प्रपीडिता|
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
சம்பூர்ணே தஸமே மாஸி மாதாஅத்யந்த ப்ரபீடிதா|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம்
ததாம்யஹம்||
பத்தாம் மாதம் பூரண கர்ப்ப நிலையில் மிகுந்த சரீர சிரமத்தை அடைந்தாளே அதற்கு ஈடாக இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

दिवा रात्रौ च या माता स्तनं दत्वा च पालयेत् |
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
திவா ராத்ரௌச யா மாதா ஸ்தனம் தத்வா ச பாலயேத்|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம்
ததாம்யஹம்||
பிரசவித்த கணத்திலிருந்து இரவும் பகலும் இடைவிடாது அலுப்பு சலிப்பின்றி முலைப்பாலை கொடுத்தாளோ அதற்கு இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

अग्निना शोष्यते देहे त्रिरात्रौ पोषणेन च |
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
அக்நிநா ஸோஷ்யதே தேஹே த்ரிராத்ரௌ
போஷணேனச|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம்
ததாம்யஹம்||
தாயின் உடலில் வெப்பத்தாக்கு ஏற்படும்பொழுது மூன்று இரவுகள் ஆகாரம் நீக்கி அவஸ்தைப்பட்டதற்கு இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

रात्रौ मूत्र पुरीषाभ्याम् भिद्यते मातृ कर्परे|
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
ராத்ரௌ மூத்ரபுரீஷாப்யாம் பித்யதே மாத்ரு கர்ப்பரே|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம்
ததாம்யஹம்||
இரவில் மலமூத்திர உபாதைகளால் தாயின் வயிறு பாதிக்கப்படும் போதும் இன்முகத்துடனே செயல்பட்டாளே அதற்கு இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

माघे मासि निदाघे च शिशिरे तप्तप दुखि:ता|
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
மாகே மாஸி நிதாகே ச ஸிஸிரே தப்த து:கிதா|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம்
ததாம்யஹம்||
பனி காலத்து குளிரிலும் கோடை காலத்து கானலிலும் இன்னல்களைபொறுத்துக் கொண்டு மகவை காப்பாற்றின அந்த தாய்க்கு இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

गात्र भंगो भवेत् मातु: घोर बाधे प्रपीदिते|
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
காத்ர பங்கோ பவேன்மாது: கோர பாதே ப்ரபீடிதே|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம்
ததாம்யஹம்||
பொறுக்க முடியாத விதவிதமான சரீர உபாதைகளால் அவயவங்களே தெறிந்து விடும்போல் நிலைமை ஏற்படும் போதும் எவள் பொறுமையுடன் செயல் பட்டாளோ அவளுக்கு இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

पादाप्याम् जनयेत् पुत्रो जननी परिदेवनम्|
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
பாதாப்யாம் ஜனயேத் புத்ரோ ஜனனீ பரிதேவனம்|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம்
ததாம்யஹம்||
கர்ப காலத்தில் மகவு தன் கால்களால் உதைத்து தாய்க்கு வேதனை செய்ததற்கு மன்னிப்பாக இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

अल्पाहारा गतामाता यावत् पुत्रोति बालक: |
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
அல்பாஹாரா கதா மாதா யாவத் புத்ரோதி பாலக:|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம்
ததாம்யஹம்||
குழந்தை வெகு சிறு பிராயத்தில் இருக்கும்பொழுது தான் தன் உண்டியை பெரிய அளவில் சுருக்கின செயலுக்காக இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

पिबेच्चि कटुद्रस्याणि काषाय विविधानि च |
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
பிபேச்சி கடுத்ரஸ்யாணி காஷாய விவிதானி ச|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம் ததாம்யஹம்||
மகவின் பொருட்டு தான் தனக்கு பிடித்தமேயற்ற மிக தீவிரமானதும் கசப்புத்தன்மையுமுள்ள கஷாயங்களையும் குடித்தாளே அதற்காக இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

पुत्रे व्याधि समायुक्ते माता आक्रन्दकारिणी |
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
புத்ரே வ்யாதி ஸமாயுக்தே மாதா ஆக்ரந்த காரிணீ|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம் ததாம்யஹம்||
மகவுக்கு ஒரு சிறு சரீர பிணக்கு,உபாதை ஏற்பட்டாலும் அலறுதல் மேற்கொள்வாளே அதற்கு இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

क्षुधा संपीड्यथे पुत्रे अन्नम् माता प्रयच्छति|
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
க்ஷுதா ஸம்பீட்யதே புத்ரே அன்னம் மாதா ப்ரயச்சதி|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம் ததாம்யஹம்||
குழந்தைக்கு பசிவேளையை குறிப்பறிந்து உணவு அளிப்பாளே அதற்கு இந்த பிண்டம் அளிக்கப்படுகிறது.

यमद्वारे पथे घोरे विक्याता वैतरणी नदी |
तस्य निष्क्रमणार्थाय मातृ पिन्डं ददाम्यहम्||
யமத்வாரே பதே கோரே விக்யாதா வைதரணீ நதீ|
தஸ்ய நிஷ்க்ரமணார்த்தாய மாத்ரு பிண்டம் ததாம்யஹம்||
யமலோகதிற்கு போகும்வழியில் பயங்கரமான வைதரணிஎன்று கூறப்படும் நதியைக் கடக்க என் தாயார் நான் கொடுக்கும் இந்த பிண்டத்தால் எளிதாக கடக்க உதவி பெறுவாள்.